# காலந்தோறும் தமிழ்

தொகுதி 3



பதிப்பாசிரியர்கள்


முனைவர் பா.மதிவாணன்

முனைவர் உ.அலிபாவா | முனைவர் அரங்க. பாரி
முனைவர் அபிதா சபாபதி | முனைவர் சீ.சாந்தா
முனைவர் இயே.பெர்க்மான்ஸ் | முனைவர் எஸ். குமரன்
முனைவர் கிருஷணன் மணியம் | முனைவர் ஆர். மோகனதாஸ்



001283

ISBN 978-93-81568-06-4

9789381568064

கலைஞன் பதிப்பகம்



கலைஞன் பதிப்பகம்

காலந்தோறும் தமிழ் - 3



காலந்தோறும் தமிழ்

தொகுதி 3





பதிப்பாசிரியர்கள்

முனைவர் பா.மதிவாணன்

முனைவர் உ.அலிபாவா | முனைவர் அரங்க. பாரி
முனைவர் அபிதா சபாபதி | முனைவர் சீ.சாந்தா
முனைவர் இயே.பெர்க்மான்ஸ் | முனைவர் எஸ். குமரன்
முனைவர் கிருஷணன் மணியம் | முனைவர் ஆர். மோகனதாஸ்

Rs. 300.00

**Kalanthorum Tamil Part - III**

**Publishing Editors**

**Dr. P. Mathivanan**

**Dr. U. Alibava** **Dr. Aranga Pari**
**Dr. Apitha Sabapathi** **Dr. C.Santha**
**Dr. Ea. Dr. Perkmans** **Dr. S. Kumaran**
**Dr. Krishanan Maniyam** **Dr. R. Mohanadoss**

First Edition : 2013

Published by

**KALAIGNAAN PATHIPAGAM**

19 Kannadhasan Salai

T. Nagar, Chennai - 600 017.
Ph : 044 - 2434 5641, 2431 3221.

Typeset by
**Classic Designs,** Chennai - 17

Printed at
**Padmavathi Offset,** Chennai.

---

காலந்தோறும் தமிழ் தொகுதி -3

பதிப்பாசிரியர்கள்:

முனைவர் பா. மதிவாணன்

முனைவர் உ. அலிபாவா முனைவர் அரங்கபாரி
முனைவர் அபிதா சபாபதி முனைவர் சீ. சாந்தா
முனைவர் இயே. பெர்க்மான்ஸ் முனைவர் எஸ். குமரன்
முனைவர் கிருஷணன் மணியம் முனைவர் ஆர். மோகனதாஸ்

முதற்பதிப்பு : 2013

வெளியீடு

**கலைஞன் பதிப்பகம்**

19, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை -17.

ஒளிஅச்சு : கிளாசிக் டிசைன்ஸ், சென்னை - 17.

அச்சிட்டோர் : பத்மாவதி ஆப்செட், சென்னை - 2.

**ISBN No : 978 - 93 - 81568 - 06 - 4**

# பதிப்புரை

இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்

**ப**ல்வேறு நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழகத் தமிழர்கள் மட்டுமன்றிப் பிற நாட்டுத் தமிழர்களும் காலத்திற்கேற்பத் தமிழை வளப்படுத்தி வருகின்றனர். தமிழ் காலந்தோறும் பல பரிமாணங்களுடன் வளர்ந்து வருகிறது.

தமிழின் மரபார்ந்த செழுமையை அவ்வப்போது உலகிற்கு உணர்த்தவும், தமிழின் புதிய வளர்ச்சியையும் புதிய இலக்கிய வடிவங்களையும் புதிதாக எழுகிற இலக்கியப் போக்குகளையும் அவ்வப்போது உலகிற்கு அறிவிக்கவும், கருத்தரங்குகள் நடத்தப் பெறுகின்றன. இத்தகைய கருத்தரங்குகளை உலக நாடுகளில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து நடத்தினால் ஆய்வு நலம் பெறும். நூல் வெளியீட்டு நிறுவனங்களும் இதற்கு ஒத்துழைப்பு நல்கினால் அவ் ஒத்துழைப்பு கருத்தரங்கம் நடத்துவதற்கு மேலும் உதவிகரமாக அமையும். அவ்வகையில் பிற பல்கலைக் கழகங்களுடனும் நூல் வெளியீட்டு நிறுவனங்களுடனும் இணைந்து கருத்தரங்குகளை நடத்துவது காலத்தின் தேவையாகிறது.

தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சிராப்பள்ளியில் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் அமைந்துள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழியல் துறையுடன் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும், சென்னை கலைஞன் - அநுராகம் பதிப்பகமும் இணைந்து **"காலந்தோறும் தமிழ்"** எனும் பொருண்மையில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 2013 டிசம்பர் 11, 12 ஆகிய நாட்களில் பன்னாட்டளவிலான கருத்தரங்கினை நடத்துகின்றன.

இக்கருத்தரங்கம் நிகழ்கிற பாரதிதாசன் பல்கலைக்கழகம் பல்லாற்றானும் சிறந்து விளங்கக்கூடிய பல்கலைக் கழகமாகும். பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழியல்துறையும் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மரபு சார்ந்தும் புதிய நோக்குடனும் பயிற்றியும் ஆய்ந்தும் வருகின்ற சிறந்த துறையாகும்.